


# 14.06.2026 செய்திகள்

## எகிப்து பெரிய பிரமிடில் சிந்து சமவெளி செந்தமிழ் : எழுத்துகளை வெளியிட்டு ஆய்வாளர் சுபாஷ் சந்திரபோஸ் தகவல்

- உலகின் 7 அதிசயங்ளில் ஒன்றான எகிப்து பிரமிடுகள் பண்டைய காலத்தில் பார்வோன் (Pharaon) என்ற பூமியை ஆள்வோன் என்னும் சிறப்பு பெயருடைய மன்னர் வம்சத்தின் நினைவுச் சின்னங்களாக உள்ளன.

- இங்கு 4,540 ஆண்டுகள் பழமையான பாரோ கூபுவின் சமாதியான கிசா (Giza) என்ற பெரிய பிரமிஷன் நுழைவாசலில் பொறிக்கப்பட்டுள்ளவை குறியீடுகள் அல்ல என்றும், அவை கி.மு 7500 ஆண்டுகள் முதல் 3500 ஆண்டுகள் வரையிலான காலத்துக்கு உட்பட்ட சிந்து சமவெளி நாகரிகத்தின் செந்தமிழ் மொழியின் 6 எழுத்துகள் என திருச்சியைச் சேர்ந்த சிந்து சமவெளி ஆய்வாளர் சுபாஷ் சந்திரபோஸ் கூறியுள்ளார்.

- பெரிய பிரமிஷன் 6 எழுத்துகளை சிந்து சமவெளி நாகரிகத்தின் எழுதும் முறைப்படி இடமிருந்து வலமாகவும், உள்ளிருந்து வெளியாகவும் 2 விதமாக படித்து பொருளறியலாம்.

- முதலாவதாக, பஉளின் நள் அதாவது பவுழியன் நள் எனவும் அதற்கு தமிழ் அகராதியின் துணையுடன் பூமி நாட்டை ஆண்டவனான சேரன் நடுவே எனவும் பொருளறியலாம்.

- இரண்டாவதாக பா உ(ள்)ளன் நள் என்பதற்கு தூய்மையான உற்ற நட்பினன் நடுவே என பொருளறியலாம். இவற்றில் முதலாவதை பூமியை ஆள்வோன் (பார்வோன்) என்பதால் பூமி நாட்டை ஆண்ட மன்னன் நடுவே என்பதைக் கொண்டு கூட்டுப் பொருள்கோள் என்ற தமிழ் இலக்கண முறைப்படி நடுவே உள்ளவன் பார்வோன் எனக் கருதலாம்.

- இரண்டாவதை சிந்து சமவெளி நகர நாகரிக பானை ஓடுகள், வில்லைகள், முத்திரைகளில் தூய்மை எனப் பொருள் பெறும். 'பா' என்ற சொல் அதிக அளவில் முன்னிலை பெற்றுள்ளதால், தூய்மையான உற்ற நட்பினன் நடுவே என்பதைக் கொண்டு கூட்டுப்பொருள்கோள் என்ற தமிழ் இலக்கண முறைப்படி நடுவே உள்ளவன் தூய்மையான உற்ற நட்பினன் எனவும் கருதலாம்.

## அயோத்தி – ஜனக்பூர் இடையே ரயில் சேவை

- உத்தர பிரதேச மாநிலம் அயோத்தி மற்றும் நேபாளத்தின் மாதேஷ் மாகாணத்தில் உள்ள ஜனக்பூர் இடையே பயணிகள் ரயில் சேவையை தொடங்குவதற்கான செயல்பாட்டு நடைமுறைகள் குறித்து இருநாட்டு அதிகாரிகளும் விரிவாக விவாதித்துள்ளனர்.

- ஹிந்து கடவுள் ராமரின் மனைவியான சீதாதேவி பிறந்த இடமான ஜனக்பூர் நம்பப்படுகிறது. இது தலைநகர் காத்மாண்டுவில் இருந்து தென்கிழக்கே 220 கி.மீ., தொலைவிலும், அயோத்தி யில் இருந்து கிழக்கே 500 கி.மீ., தொலைவிலும் அமைந்துள்ளது.

- இதனால் இரு நாடுகளைச் சேர்ந்த லட்சக்கணக்கான பக்தர்கள், இந்த இரு ஆன்மிகத் தலங்களுக்கும் தொடர்ந்து பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இந்த புதிய ரயில் சேவை, ஆன்மிகப் பயணிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

- நைல் நதிக் கரையோரம் அமைந்துள்ள மன்னர்கள் பள்ளத்தாக்கில் (கிங்ஸ் வேலி) மேலை நாட்டு அறிஞர் பெரும க்களால் கண்டறியப் பெற்றுள்ளதும், 2100 ஆண்டுகளுக்கும் முற்பட்டதுமான சிகைக் கொற்ற(ர)ன், சாத்தன் போன்றவை செந்தமிழ் பெயர்ச் சொற்கள் என்பதால் எகிப்து நாட்டுக்கும், தமிழகத்துக்கும் இடையே தொடர்பு இருந்தது தெரிய வருகிறது.
- இருப்பினும், எகிப்து நாட்டுக்கும் சிந்து சமவெளிக்கும், தமிழகத்துக்கும் இடையிலான தொடர்பு எவ்வகையானது, பிரமிஷன் கட்டுமானப் பணியில் தமிழக கட்டிடக் கலைஞர்களின் பங்கு இருந்துள்ளதா போன்ற வினாக்களுக்கான விடைகள் ஆராயத்தக்கவை.

## அயோத்தி - ஜனக்பூர் இடையே ரயில் சேவை

- உத்தர பிரதேச மாநிலம் அயோத்தி மற்றும் நேபாளத்தின் மாதேஷ் மாகாணத்தில் உள்ள ஜனக்பூர் இடையே பயணிகள் ரயில் சேவையை தொடங்குவதற்கான செயல்பாட்டு நடைமுறைகள் குறித்து இருநாட்டு அதிகாரிகளும் விரிவாக விவாதி த்துள்ளனர்.
- ஹிந்து கடவுள் ராமரின் மனைவியான சீதாதேவி பிறந்த இடமான ஜனக்பூர் நம்பப்படுகிறது. இது தலைநகர் காத்ம ாண்டுவில் இருந்து தென்கிழக்கே 220 கி.மீ., தொலைவிலும், அயோத்தியில் இருந்து கிழக்கே 500 கி.மீ., தொலைவிலும் அமைந்துள்ளது.
- இதனால் இரு நாடுகளைச் சேர்ந்த லட்சக்கணக்கான பக்தர்கள், இந்த இரு ஆன்மிகத் தலங்களுக்கும் தொடர்ந்து பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இந்த புதிய ரயில் சேவை, ஆன்மிகப் பயணிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

## ஐரோப்பிய யூனியனில் உக்ரைன், மால்டோவா

- ரஷியாவுடனான போர் தொடர்ந்து வரும் நிலையிலும், உக்ரைன் மற்றும் மால்டோவா நாடுகளை ஐரோப்பிய யூனியனில் (ஐ.யூ.) இணைப்பதற்கான பேச்சுவார்த்தை லக்சம்பர்க்கில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கவுள்ளது.
- பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தூதர்கள் கூட்டத்தில், 27 உறுப்பு நாடுகளும் இதற்கு ஒப்புதல் அளித்தன.
- ரஷியாவுக்கு எதிரான போருக்குப் பிந்தைய தங்களின் எதிர்காலப் பாதுகாப்புக்கு ஐரோப்பிய யூனியன் உறுப்பினர் அந்தஸ்து முக்கிய அரணாக இருக்கும் என்று உக்ரைன் கருதுகிறது.
- உக்ரைனுக்கு நேட்டோ அமைப்பில் உறுப்பினர் அந்தஸ்து வழங்குவதே மிகச் சிறந்த பாதுகாப்பாக இருக்கும் என்றபோதி லும், அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகம் அதற்கு முட்டுக்கட்டையாக உள்ளது.
- போர் நீடிக்கும் சூழலில், உக்ரைனை நேட்டோவில் சேர்க்க மற்ற நாடுகளும் எதிர்த்து வருகின்றன.
- உக்ரைன் நேட்டோவில் இணைவதைக் கடுமையாக எதிர்த்து வரும் ரஷியா, 2022-இல் போரைத் தொடங்கியதற்கு அதுவே முக்கியக் காரணமாக கூறியிருந்தது.
- ஐரோப்பிய யூனியனில் ஒரு நாடு முழுமையாக இணைய வேண்டுமானால், விவசாயம் முதல் வர்த்தகம் வரையிலான 35 கொள்கை ரீதியிலான துறைகளில் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக நிறைவு செய்ய வேண்டும். இதற்குப் பல ஆண்டுகள் ஆகலாம்.


| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI | SALEM |
|---|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 | 95147 89102 |

## விவசாயிகள் உரிமைகளைப் பாதுகாக்க புதிய உலகளாவிய அமைப்பு : பிரிக்ஸ் கூட்டத்தில் முடிவு

- பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பிரிக்ஸ் கூட்டமைப்பின் வேளாண் துறை அமைச்சர்கள் ம ாநாடு, இந்திய தலைமையின்கீழ் மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் நடைபெற்றது.
- விவசாயிகளின் உரிமைகள் மற்றும் விதைகள் சார்ந்த பாரம்பரிய அறிவைப் பாதுகாக்க புதிய உலகளாவிய அமைப்பை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த இந்த முன்முயற்சியை இந்தியா ஒருங்கிணைக்கும்.
- வேளாண் துறை உள்ளீடுகள், மரபுசார் வளங்கள், தகவல் பகிர்வில் ஒத்துழைப்பை உறுதி செய்ய பிரிக்ஸ் அக்ரின் என்ற புதிய வலையமைப்பு உருவாக்கப்படும். இந்த முன்னெடுப்புக்கும் ஒருங்கிணைப்பு நாடாக இந்தியா செயல்பட உள்ளது.
- பிரிக்ஸ் நாடுகள் இடையே உணவு தானியங்கள் வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்தும் பிரிக்ஸ் தானியங்கள் பரிமாற்றத் திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புக் கொள்ளப்பட்டது.
- தொடக்க அளவில், இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பை இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஏஆர்) மேற்கொள்ளும் வேளாண்துறையில் செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம், புவிசார் தொழில்நுட்பம், பிற எண்ம வழிமுறைகளின் பயன்பாட்டை ஊக்குவிக்க எண்ம வேளாண் தொழில் நுட்பக் கட்டமைப்பு உருவாக்கப்படும். இதற்கான தொடக்கநிலை ஒருங்கிணைப்பை தில்லி ஐஐடி கையாளும்.

## இந்திய ராணுவத்தின் அடுத்த தலைமைத் தளபதி தீரஜ் சேத்

- இந்திய ராணுவத்தின் அடுத்த தலைமைத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் தீரஜ் சேத் நியமிக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.
- தற்போதைய ராணுவ தலைமைத் தளபதி உபேந்திர துவிவேதியின் பதவிக்காலம் ஜூன் 30-ஆம் தேதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், பணிமூப்பு கொள்கையின்படி இந்த நியமனத்தை பாதுகாப்பு அமைச்சகம் மே ற்கொண்டுள்ளது.
- ராணுவ துணை தலைமைத் தளபதியாகப் பணியாற்றி வரும் தீரஜ் சேத், ராணுவத்தின் அடுத்த தலைமைத் தளபதியாக நியமிக்கப்படுகிறார். ஜூன் 30-ஆம் தேதி அவர் பொறுப்பேற்றுக் கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.
- ராணுவத்தை நவீனப்படுத்தவும், வலுப்படுத்துவதற்குமான வியூகத் திட்டங்களை வகுப்பவராக அறியப்படும் தீரஜ் சேத் 1986, டிசம்பர் மாதம் ராணுவத்தில் இணைத்தார்.
- கடக்வாஸ்லாவில் உள்ள தேசியப் பாதுகாப்பு அகாதெமியின் முன்னாள் மாணவரான இவர் 40 ஆண்டுகளுக்கு மே லாக ராணுவத்தின் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றியுள்ளார்.
- பாலைவனப் பகுதிகள், மேற்குப் பகுதி மற்றும் ஜம்மு-காஷ்மீர் என நாட்டின் எல்லைப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள ஆயுதமேந்திய படைகளை வழிநடத்தியுள்ளார்.
- லெப்டினன்ட் ஜெனரலாக ராணுவத்தின் அதிதிறன் மிக்க தாக்குதல் படைகளில் ஒன்றான சக்ரா கோர் படையை வழிநடத்தியுள்ளார். தில்லி பகுதியில் கமாண்ட் அதிகாரியாக பதவி வகித்தபோது தேசிய மற்றும் சர்வதேச ராணுவ ஒத்துழைப்புகளுக்கு முக்கிய பங்காற்றியுள்ளார்.

SURESH'